THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Wednesday, the 15th March 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER: As the Hon. Minister for Finance is not here now, Short Notice Question No. 7 will be taken up afterards.

Silver ore (Ariyalur)

* 831 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

திருச்சி மாவட்டம் அரியலூருக்கருகில் கிடைக்கும் வெள்ளியைத் தோண்டி எடுக்க சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN: No occurrences of silver have been recorded near Ariyalur in Tiruchirappalli district.

SRI S. M. ANNAMALAI: இங்கு கிடைப்பது வெள்ளி அல்லது வெள்ளீயம் கிடைப்பதாக சர்க்காருக்கு தகவல் அனுப்பி யிருக்கிறார்களா ? அப்படியானால் அதைப்பற்றி எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN: வெள்ளீயம்கூட இல்லை. ஸிங்க் மாதிரி இருந்தது. மெடாலிக் ஸிங்க் யூஸ்புல் மினரல் அல்ல என்று தெரிவிக்கப்பட்டது.

Bridge across Cauvery (Pulampatti)

MR. SPEAKER: As the hon. Member who gave notice of Question No. 832 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

* 832 *Q.*—SRI P. S. CHINNADURAI: கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம்-கோவை ஜில்லாக்களை இணைக்கும் முறையில் மேட்டூருக்கும் பவானிக்கும் இடையில் பூலாம்பட்டி கிராமத்தி னருகில் காவேரி நதி மீது பாலம் கட்ட வேண்டுமென்று இடைப் பாடி பஞ்சாயத்து யூனியன் 1960-ம் ஆண்டு டிசம்பர் 12-ம் தேதிய கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை சர்க்கார் பெற்றுக் கொண்டார்களா ?

[15th March 1961

(இ) அப்படியானால், அதன்மீது சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாது ?

THE HON. SRI P. KAKKAN : (அ) Yes, Sir.

(இ) The cost of the bridge work is estimated at Rs. 16·50 lakhs. The Government of India were addressed for their approval for taking up the work under economic and Inter-State Importance Scheme in 1960–61 but they have not agreed to the proposal.

MR. SPEAKER : As the Hon. Home Minister has not yet come, his questions may be taken up when he comes.

Short Notice Question.

Women Welfare Department (Retrenchment)

MR. SPEAKER : The Hon. Minister for Finance has come. We shall take up Question No. 7.

* 7 *S.N.Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) சமுதாய நலத்திட்டப் பகுதிகளில் மாதர் நல இலாகாவில் வேலை செய்பவர்களை 1—4—61-ந் தேதியிலிருந்து வேலையிலிருந்து நீக்கப்படும் என்று நோட்டீஸ் கொடுத்திருப்பது உண்மையா ?

(இ) அப்படியாயின், அதனால் பாதிக்கப்படுபவர்கள் எத்தனை பேர் ?

(உ) இவர்களுக்கு வேறு வேலை கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) No, Sir.

(இ) & (உ) Do not arise.

SRI S. M. ANNAMALAI : சமுதாயநலத் திட்டப் பகுதியில் உள்ள மாதர் நல இலாகா மத்திய சர்க்காரால் நடத்தப்படுவதால், இந்த இலாகாவை கலைத்துவிடவேண்டுமென்று தகவல் தெரிவித்தார்களா ? அப்படியென்றால் மத்திய சர்க்காரை நமது சர்க்கார் கலந்து ஆலோசித்ததா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள் வேறு விஷயத்தைப்பற்றி கேட்பதாக இருந்தால் அதைப் பற்றி நோட்டீஸ் கொடுக்கவேண்டும்.

Rains (November 1960)

* 834 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN :
SRI N. K. PALANISAMI :
SRI S. M. ANNAMALAI :
SRI A. VEDARATHNAM :
SRI T. S. RAMASWAMI :
SRI A. A. RASHEED :
SRI T. T. DANIEL :
SRI N. R. THIAGARAJAN :
SRI K. VINAYAKAM:
SRI M. KALYANASUNDARAM :
} கனம் ரெவின்யூ